# திருமங்கலம் நகைக்கடை கொள்ளையர்கள் உள்பட 9 பேர் குண்டர் தடுப்பு சட்டத்தில் கைது

சென்னை, மே 9–

திருமங்கலம் நகைக்கடை கொள்ளையர்கள் உள்பட 9 பேர் குண்டர் தடுப்பு சட்டத்தில் கைது செய்யப்பட்டனர்.

சென்னை பெருநகரில் குற்றச் சம்பவங்களில் ஈடுபடும் குற்றவாளிகளை கண்டுபிடித்து கைது செய்யவும், குற்றச் செயல்கள் நடவாமல் தடுக்கவும் பல்வேறு குற்றத் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், சென்னை பெருநகரக் காவல் துறை கமிஷனர் விசுவநாதன் உத்தரவின்பேரில், தொடர்ந்து குற்றச் செயல்களில் ஈடுபடும் நபர்கள் குண்டர் தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

அதன்படி ஆரோக்ய ஜான் பாஸ்கோ, தேவராஜ் (எ) கத்திக்குத்து தேவராஜ், ஆகிய இருவர் மீது திருமங்கலம் காவல் நிலைய குற்றப்பிரிவிலும், தினேஷ் (எ) தினேஷ்குமார், கொடுங்கையூர் ஜனா (எ) ஜனார்த்தனன், சென்னை குகன்ராஜ், ஆகிய 3 பேர் மீது கொடுங்கையூர் காவல் நிலையத்திலும், பிரகாஷ் (எ) முட்டை பிரகாஷ், என்பவர் மீது ஆவடி டேங்க் பாக்டரி காவல் நிலையத்திலும் மன்சூர் அலி, தௌபிக் அலி, ஆகிய இருவர் மீது மைலாப்பூர் காவல் நிலையத்திலும் ராகேஷ் சர்மா என்பவர் மீது ஐஸ்அவுஸ் காவல் நிலையத்திலும் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி, 9 பேரும் தொடர்ந்து குற்றச் செயல்களில் ஈடுபட்டு வந்ததால், சம்பந்தப்பட்ட காவல் ஆய்வாளர்கள் பரிந்துரை செய்ததன்பேரில், கமிஷனர் விசுவநாதன் மேற்படி 9 பேரையும் குண்டர் தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் கைது செய்ய உத்தரவிட்டார். அதன்பேரில் மேற்படி 9 பேரும் குண்டர் தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டனர்.

இதில் குற்றவாளிகள் ஆரோக்ய ஜான் பாஸ்கோ மற்றும் தேவராஜ் (எ) கத்திகுத்து தேவராஜ் ஆகியோர் மீது சமீபத்தில் திருமங்கலம் காவல் நிலைய எல்லையில் உள்ள நகைக்கடையில் திருடிய வழக்கு உட்பட பல வழக்குகள் உள்ளது.

# பெசன்ட் நகர், கொடுங்கையூர் பகுதிகளில் நாளை மின்தடை

சென்னை, மே. 9–

சென்னையில் நாளை (10ந் தேதி) காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை மின் வாரிய பராமரிப்புப் பணி காரணமாக கீழ்கண்ட இடங்களில் மின் விநியோகம் நிறுத்தப்படும்.

மாலை 4 மணிக்குள் பராமரிப்பு பணி முடிவடைந்தவுடன் மின் விநியோகம் கொடுக்கப்படும்.

பெசன்ட் நகர் பகுதி : கடற்கரை சாலை, திடீர் நகர், அஷ்டலட்சுமி தோட்டம், பாரி தெரு, திரு முருகன் தெரு, கங்கை தெரு, காவேரி தெரு, புலி வரதாச்சாரி சாலை, எம்.ஜி.ஆர். சாலை, அருண்டாலி கடற்கரை சாலை, கடற்கரை சாலை.

கொடுங்கையூர் பகுதி : டி.எச். ரோடு, ஆர்.ஆர்.நகர், டி.வி.கே.லிங்க் ரோடு, ஆர்.ஆர்.நகர், கக்கன்ஜீ தெரு, அம்பேத்கார் தெரு, சர்வபிள்ளை தெரு, கணபதி தெரு, கண்ணன் தெரு, பாலகிருஷ்ணன் தெரு, வாஞ்சிநாதன் தெரு, சி.எம்.டபிள்யூ குடியிருப்பு.

இத்தகவலை தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் தெரிவித்துள்ளது.



## மெக்சிகோவில் இருந்து விண்ணில் செலுத்தப்பட்ட

# ‘அனிதா சாட்’ செயற்கைக்கோள் உருவாக்கிய மாணவிக்கு அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் பரிசு வழங்கி பாராட்டு

**சென்னை, மே. 9–**

**மெக்சிகோவில் இருந்து விண்ணில் செலுத்தப்பட்ட ‘அனிதா சாட்’ செயற்கைக்கோள் உருவாக்கிய திருச்சி மாணவி வில்லட் ஓவியாவுக்கு அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் நினைவு பரிசு வழங்கி பாராட்டு தெரிவித்தார்.**

திருச்சி மாவட்டம் திருவெறும்பூர் தொகுதி குமரேசபுரத்தை சேர்ந்த ஆல்பர்ட் குமார் – சசிகலா தம்பதியின் மகள் வில்லட் ஓவியா. இவர் திருச்சி பெல் வளாகத்தில் உள்ள ஆர்.எஸ்.கே. மேல்நிலைப் பள்ளியில் பிளஸ்2 வகுப்பு படித்து வருகிறார். 500 கிராம் எடை கொண்ட செயற்கைக்கோள் ஒன்றை வில்லட் ஓவியா உருவாக்கினார்.

இதுபற்றி மாணவி வில்லட் ஓவியா கூறுகையில், எனது பள்ளி படிப்புக்கு இடையே 3 ஆண்டுகள் உழைத்து இந்த செயற்கைகோளை உருவாக்கினேன்.

இந்த செயற்கைகோளில் வளி மண்டலத்தில் கலந்துள்ள கார்பன் மோனாக்சைடு, கார்பன்டை ஆக்சைடு, ஆக்ஸிஜன் உள்ளிட்டவற்றின் அளவை கண்டறிவதற்கு தேவையான சென்சார் கருவிகள் உள்ளன. மேலும் அது பயணிக்கும் இடங்களை படம் பிடிக்க சிறிய கேமரா, செயற்கைகோளின் இருப்பிடத்தை கண்டறிய ஜி.பி.எஸ். கருவி ஆகியவற்றையும் பொருத்தியுள்ளேன். செல்போன் மூலமாகவே இதை கட்டுப்படுத்தலாம்.

மேலும் இது அளிக்கும் தகவல்களை சேகரிக்கவும், அது அனுப்பும் படங்களை பார்க்கவும் முடியும். இது ஏறத்தாழ கடல் மட்டத்தில் இருந்து 50 கிலோ மீட்டர் உயரத்தில் பறக்கவிடப்படும். 15 செ.மீ. கியூப் வடிவத்தில் சுமார் 500 கிராம் எடை கொண்ட இந்த செயற்கைக் கோள் ஒரு கேப்சூல் எனப்படும் விண்ணுக்கு எடுத்து செல்ல உதவும் கருவியில் வைக்கப்பட்டு ஹீலியம் பலூன் மூலம் மெக்சிகோவில் இருந்து வளிமண்டலத்தில் ஏவப்பட்டது.

நீட் தேர்வை எழுதி அதில் தோல்வியடைந்ததால் மனமுடைந்து தனது உயிரை நீத்த அனிதாவின் நினைவாக செயற்கைகோளுக்கு அனிதா சாட் என பெயர் வைத்துள்ளேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் கே.ஏ. செங்கோட்டையன் கே.ஆ.வில்லட் ஓவியாவை பாராட்டி நினைவுப்பரிவு வழங்கினார்.

அரசு முதன்மைச் செயலாளர் பள்ளிக் கல்வித்துறை பிரதீப் யாதவ் உடன் இருந்தார்.

# மாணவர்களை சுற்றுலா அழைத்து செல்லும்போது முன்அனுமதி பெறவேண்டும்

## மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குனரகம் அறிக்கை

**சென்னை, மே.9–**

**மாணவர்களை சுற்றுலா அழைத்துச் செல்லும்போது முன்அனுமதி பெறவேண்டும் என்று மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குனரகம் கூறியுள்ளது.**

தமிழ்நாடு மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குனர் கண்ணப்பன் அனைத்து முதன்மை கல்வி அதிகாரிகள், மெட்ரிகுலேஷன் பள்ளி ஆய்வாளர்கள் ஆகியோருக்கு அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது:

பள்ளி மாணவ–மாணவிகளை சுற்றுலா அழைத்துச்செல்வது தொடர்பாக ஏற்கனவே விரிவான அறிவுரைகள் மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இவ்வாறு அறிவுரைகள் வழங்கப்பட்டும், பள்ளி நிர்வாகங்கள் அதனை பின்பற்றாமல் உரிய அனுமதியின்றி பள்ளி மாணவ–மாணவிகளை சுற்றுலா அழைத்துச்செல்வதால், செல்லும் இடங்களில் கவனக்குறைவினால் விலைமதிப்பில்லாத குழந்தைகளின் உயிரிழப்பு ஏற்படுவதும் நடைபெறுகிறது. இவ்வாறான செயல்களுக்கு பள்ளி தாளாளர் மற்றும் முதல்வரே முழு பொறுப்பாவார்.

சமீபத்தில் சென்னையில் உள்ள மெட்ரிகுலேஷன் பள்ளி மாணவர்களை எவ்வித முன்அனுமதியும் பெறாமல் புனேவிலுள்ள முல்சி அணைக்கு அழைத்துச் சென்றபோது அதில் துரதிர்ஷ்டவசமாக 3 மாணவர்கள் உயிரிழந்தனர். இது மிகவும் வருத்தமளிக்கும் நிகழ்வாகும். இதற்கு பள்ளி நிர்வாகமே காரணம். இதுபோன்ற நிகழ்வுகள் இனிவரும் காலங்களில் ஏற்படாத வண்ணம் கீழ்கண்ட அறிவுரைகளை பின்பற்றுமாறு அனைத்து பள்ளி நிர்வாகத்தினருக்கும் தெரிவிக்கப்படுகிறது.

சுற்றுலாவின் காலஅளவு எக்காரணம் கொண்டும் 4 நாட்களுக்கு மிகக்கூடாது. பருவநிலை, வானிலை அறிக்கை ஆகியவற்றைக் கொண்டு சுற்றுலாவிற்கான இடம் தேர்வு செய்யப்பட வேண்டும். சுற்றுலா செல்லவுள்ள நாள், இடம் மற்றும் வாகனம் முடிவு செய்யப்பட்டவுடன் அதுகுறித்து சுற்றுலாவிற்கு வரும் அனைத்து குழந்தைகளின் பெற்றோரிடமும் எழுத்துமூலம் தெரிவிக்கப்பட்டு அவர்களின் ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

சுற்றுலா செல்லவுள்ள இடம் குறித்து மாணவ–மாணவியருக்கு எடுத்துக்கூறி அந்த இடங்களில் எவ்வாறு பாதுகாப்பாக நடந்துகொள்ள வேண்டும் என்பது குறித்து வகுப்பு எடுக்க வேண்டும். சுற்றுலா செல்லவுள்ள இடத்தில் பாதுகாப்பு உபகரணங்கள் தேவைப்படின் அதை ஒவ்வொரு மாணவரும் எடுத்துச்செல்வதை உறுதி செய்ய வேண்டும்.

10 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர், 10 மாணவிகளுக்கு ஒரு ஆசிரியை வீதம் உடன் செல்ல வேண்டும். ஆறு, ஏரி, குளம், குட்டை, அருவி மற்றும் கடல் போன்ற நீர்நிலை பகுதிகளுக்கு செல்லக்கூடாது. சுற்றுலா செல்லும் பேருந்து முறையாக தரச்சான்று பெற்ற வாகனமா, போதிய அனுபவமுள்ள ஓட்டுநர் நியமிக்கப்பட்டுள்ளாரா என்பதை உறுதி செய்துகொள்ள வேண்டும். இரவு 10 மணி முதல் அதிகாலை 4 மணி வரை பயணத்தை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும்.

மாணவர்கள் சுற்றுலா செல்லும்போது பாதுகாப்புக்காக எங்களிடம் (மெட்ரிகுலேஷன் இயக்குனரகம்) முன் அனுமதி பெறவேண்டும்.

இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# என்ஜினீயரிங் கலந்தாய்வுக்கு இதுவரை 32 ஆயிரம் பேர் விண்ணப்பம்

**சென்னை, மே.9**

**என்ஜினீயரிங் கலந்தாய்வுக்கு 32 ஆயிரம் பேர் இதுவரை விண்ணப்பித்துள்ளனர் என்று மாணவர் சேர்க்கை செயலாளர் ரைமண்ட் உத்தரியராஜ் தெரிவித்துள்ளார்.**

தமிழகத்தில் அரசு கல்லூரிகள் மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகள், சுயநிதி கல்லூரிகள் என்று மொத்தம் 562 என்ஜினீயரிங் கல்லூரிகள் இருக்கின்றன. இந்த கல்லூரிகளில் பி.இ. படிப்புகளுக்கு 2 லட்சத்து 60 ஆயிரம் இடங்கள் உள்ளன. இவற்றில் ஒரு லட்சத்து 90 ஆயிரம் இடங்கள் அண்ணா பல்கலைக்கழகம் நடத்தும் கலந்தாய்வு மூலம் நிரப்பப்படுகின்றன. இந்த வருடம் முதன்முதலாக ஆன்லைன் மூலம் கலந்தாய்வு நடைபெறும் என்று அண்ணா பல்கலைக்கழகம் அறிவித்து உள்ளது. இதற்காக கடந்த 3ந்தேதி முதல் ஆன்லைனில் விண்ணப்பித்து வருகிறார்கள்.

மாணவர்கள் www.annauniv.edu/tnea2018 எனும் இணையதள முகவரியை பயன்படுத்தி எந்த பகுதியிலும் இருந்தும் ஆன்லைனில் விண்ணப்பித்து வருகிறார்கள். இணையதள வசதி இல்லாதவர்கள் தமிழகத்தில் அமைக்கப்பட்டு உள்ள 42 உதவி மையங்களுக்கு சென்று இலவசமாக விண்ணப்பித்து வருகிறார்கள். இதுவரை 32 ஆயிரம் பேர் விண்ணப்பத்து உள்ளனர்.

இது குறித்து என்ஜினீயரிங் மாணவர் சேர்க்கை செயலாளர் ரைமண்ட் உத்தரியராஜ் கூறுகையில், ‘விண்ணப்பிக்கும்போது இ–மெயில் முகவரி தேவை. எனவே இ–மெயில் உருவாக்க தெரியாத மாணவ–மாணவிகளுக்கு மாவட்டங்களில் உள்ள உதவி மையங்களில் உள்ளவர்கள் இ–மெயில் உருவாக்கி கொடுக்கிறார்கள். அதற்காக கூடுதல் ஆட்கள் உள்ளனர். எனவே இ–மெயில் உருவாக்க தெரியாதவர்கள் உதவி மையங்களுக்கு செல்லுங்கள்’ என்று தெரிவித்தார்.

என்ஜினீயரிங் சேர்க்கைக்கு ஆன் லைனில் விண்ணப்பிக்க இம்மாதம் 30ந் தேதி கடைசி நாள் ஆகும்.




# சிதம்பரம் ஜமாபந்தியில் பயனாளிகளுக்கு பட்டா மாற்றத்திற்கான ஆணை

கடலூர், மே.9–

சிதம்பரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற ஜமாபந்தியில் பயனாளிகளுக்கு பட்டா மாற்றத்திற்கான ஆணையை கலெக்டர் தண்டபாணி வழங்கினார்.

கடலூர் மாவட்டம் சிதம்பரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் கலெக்டர் தண்டபாணி தலைமையில் நடைபெற்ற 4–ம் நாள் ஜமாபந்தியில் பொதுமக்களிடமிருந்து 282 பல்வேறு வகையான கோரிக்கை மனுக்களைப் பெற்றார்.

இன்றைய தினம் நடைபெற்ற ஜமாபந்தியில் சிதம்பரம் வட்டம் திருவக்குளம் குறுவட்டம் ஜெயங்கொண்டபட்டினம், கிள்ளை (தெற்கு), கிள்ளை (வடக்கு), சி.மானம்பாடி, தில்லைவிடங்கன் (தெற்கு), தில்லைவிடங்கன் (வடக்கு), வல்லம்படுகை, எருக்கன்காட்டுப்படுகை, கீழ்அணுவம்பட்டு, பின்னத்தூர்(மேற்கு), கொடிப்பள்ளம், பின்னத்தூர் (கிழக்கு), கணக்கரப்பட்டு, கீழப்பெரம்பை ஆகிய கிராமங்களுக்கு உட்பட்ட பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை மாவட்ட கலெக்டர் பெற்று அதன்மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு தீர்வு காண்பதற்காக சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் மனுக்களை அளித்தார். கடலூர் மாவட்டம் சிதம்பரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் 3–ந் தேதி அன்று நடைபெற்ற ஜமாபந்தியில் 56 மனுக்களும், 4–ந் தேதி அன்று நடைபெற்ற ஜமாபந்தியில் 142 மனுக்களும், 7–ந் தேதி அன்று நடைபெற்ற ஜமாபந்தியில் 298 மனுக்களும், 8–ந் தேதியன்று நடைபெற்ற ஜமாபந்தியில் முதியோர் உதவித்தொகை கோரி 142 மனுக்களும், பட்டா மாறுதல் கோரி 35 மனுக்களும், பட்டா வேண்டி 67 மனுக்களும், குடும்ப அட்டை கோரி 2 மனுக்களும், இதர வகை 36 மனுக்களும் என 282 மனுக்களும் ஆகமொத்தம் 778 மனுக்கள் கலெக்டர் தண்டபாணியால் பெறப்பட்டது.

இவற்றில் இன்றைய தினம் நடைபெற்ற ஜமாபந்தியில் பெறப்பட்ட மனுக்களில் 28 மனுக்கள் மீது உடனடி தீர்வு காணப்பட்டு 17 நபர்களுக்கு இந்திராகாந்தி தேசிய முதியோர் உதவித்தொகைக்கான ஆணைகளையும், 10 நபர்களுக்கு பட்டா மாற்றத்தினையும், 1 நபருக்கு பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினருக்கான சான்றிதழினையும் கலெக்டர் தண்டபாணி வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் உதவி இயக்குநர் (நிலஅளவை) எஸ்.ரவி, சிதம்பரம் வட்டாட்சியர் அ.அமுதா, தனி வட்டாட்சியர் சா.கீதா, தனி வட்டாட்சியர் சரஸ்வதி, மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர் சீனுவாசன், பரங்கிப்பேட்டை உதவி இயக்குநர் ஆர்.விஜயராகவன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் வை.ரவிச்சந்திரன், தலைமையிடத்து துணை வட்டாட்சியர் செல்வகுமார், வருவாய் ஆய்வாளர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.


**பொன்னி சுகர்ஸ் (ஈரோடு) லிமிடெட்**
CIN:L15422TN1996PLC037200
பதிவு அலுவலகம்: "எஸ்வின் ஹவுஸ்", 13 ராஜீவ் காந்தி சாலை (OMR),பெருங்குடி, சென்னை 600 096
தொலைபேசி: 044-39279300 தொலைநகல்: 044-24960156
மின்னஞ்சல்: admin@ponnisugars.com இணையதளம்: www.ponnisugars.com

**அறிவிப்பு**

31 மார்ச் 2018 அன்றுடன் முடிவடைந்த ஓராண்டிற்கான தணிக்கை செய்யப்பட்ட நிறுவனத்தின் நிதிநிலை அறிக்கையை பரிசீலிக்கும் பொருட்டும், நிறுவனத்தின் இயக்குநர்கள் குழுக்கூட்டம், 25 மே 2018 வெள்ளிக்கிழமை அன்று நடைபெற உள்ளது.

பொன்னி சுகர்ஸ் (ஈரோடு) லிட்.காக
நா.இராமநாதன்
நிர்வாக இயக்குநர்
சென்னை
08-05-2018



**டுவென்டிபர்ஸ்ட் செஞ்சுரி மானேஜ்மெண்ட் சர்வீசஸ் லிமிடெட்**
பதிவு அலுவலகம்: எண். 67, பழைய எண். 28–ஏ, கதவு எண். G–3, எல்டாம்ஸ் ரோடு, ஆழ்வார்பேட்டை, சென்னை–600 018.
TELEPHONE +91 44 42030149, FAX +91 44 24328452
WEBSITE: www.tcms.bz; e-mail: Invesotrs@tcms.bz CIN: L74210TN1986PLC012791

**அறிவிப்பு**

SEBI (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 29 (1) (ஏ) மற்றும் 47ன்படி கீழ்க்கண்டவை குறித்து பரிசீலிப்பதற்காக கம்பெனியின் இயக்குனர்கள் குழு கூட்டம் வியாழக்கிழமை, 17 மே 2018 அன்று மாலை 4.00 மணிக்கு கம்பெனியின் கார்ப்பரேட் அலுவலகம், கிரீஸ் ஹவுஸ், ஜகாரியா பந்தர் ரோடு, சேவ்ரி–மேற்கு, மும்பை–400 015ல் நடைபெறுகிறது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

1. 31 மார்ச், 2018–ல் முடிந்த காலாண்டு மற்றும் ஆண்டிற்கான தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகளை பரிசீலித்து பதிவு செய்தல்.
2. நிதி ஆண்டு 2017–18க்கு கம்பெனியின் சம பங்குகளுக்கு இறுதி டிவிடெண்ட், மற்றவை குறித்து பரிந்துரை செய்தல் அல்லது/பரிசீலித்தல்

கம்பெனியின் இணைய தளம் www.tcms.bz மற்றும் மும்பை ஸ்டாக் எக்சேஞ்சின் இணையதளம் www.bseindia.com மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்சேஞ் ஆப் இந்தியா, மும்பை இணையதளம் www.nseindia.comல் இந்த அறிவிப்பு உள்ளது.

குழுவின் ஆணைப்படி
டுவென்டிபார்ஸ்ட் செஞ்சுரி மானேஜ்மெண்ட் சர்வீசஸ் லிமிடெட்டுக்காக
இடம்: சென்னை
தேதி : 9 மே 2018
ஒப்பம்/– (A.V.M. சுந்தரம்)
கம்பெனி செயலாளர்



**VEHICLE FOR SALE**

| S.NO. | VEH.NO | MAKE | MODEL | YEAR OF MODEL |
|---|---|---|---|---|
| 1. | TN12K0996 | TATA | MARUTI DZIRE-P | 2015 |
| 2. | TN20BJ0608 | TATA | TATA INDICA-P | 2012 |

CONTRACT NO : 9094039453/9941419907



**பெயர் மாற்றம்**

K.N. MOHAMED FATHIMI NIZAMUDDIN, பிறந்த தேதி: 7.4.2000, எண்.5–824A, மேல செட்டி தெரு, அடைக்கமங்கலம், திருவாரூர் –611 101, என்ற முகவரியில் வசிக்கும் எனது மகன் இனி **M.F. NIZAMUDDIN,** என்று அழைக்கப்படுகிறார்.

**A.KHWAJA NIZAMUDDIN**
தந்தை



**EIH அசோசியேட்டட் ஹோட்டல்ஸ் லிமிடெட்**
பதிவு அலுவலகம்: 1/24, ஜி.எஸ்.டி ரோடு, மீனம்பாக்கம், சென்னை–600027.
CIN: L92490TN1983PLC009903
வெப்சைட்: www.eihassociatedhotels.in
போன் : 91-44-22344747, பேக்ஸ் : 91-44-22346699

**அறிவிப்பு**

செக்யூரிடீஸ் அண்ட் எக்சேஞ் போர்டு ஆப் இந்தியா (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015ன் விதி 47ன்படி, இதர அலுவல்களுக்கு இடையே 31 மார்ச், 2018ல் முடிந்த காலாண்டு/நிதி ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகளை பரிசீலித்து, ஒப்புதல் அளித்து பதிவு செய்யவும் மற்றும் டிவிடெண்டை பரிந்துரை செய்யவும் கம்பெனி இயக்குனர்கள் குழுவின் கூட்டம் திங்கட்கிழமை, 28 மே 2018 அன்று நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இந்த அறிவிப்பு கம்பெனியின் இணையதளம் www.eihassociatedhotels.in மற்றும் ஸ்டாக் எச்சேஞ்சுகளின் இணைய தளம் www.bseindia.com மற்றும் www.nseindia.comலும் உள்ளது.

EIH அசோசியேட்டட் ஹோட்டல்ஸ் லிமிடெட்டுக்காக
இந்த்ராணி ரே
கம்பெனி செயலாளர்
8 மே, 2018



**MAHINDRA HOLIDAYS & RESORTS INDIA LTD**
ClubMahindra
**Regd. Off. :** Mahindra Towers, 17/18, Pattulos Road, Chennai - 600 002
**Corp. Off. :** Mahindra Towers, Dr G M Bhosle Marg, Worli, Mumbai - 400 018
**CIN:L55101TN1996PLC036595**
**w:** www.clubmahindra.com, **e:** investors@mahindraholidays.com

**EXTRACT OF AUDITED FINANCIAL RESULTS FOR THE QUARTER AND YEAR ENDED MARCH 31, 2018**

(Rs. in lacs)

| Sl No | Particulars | Stand-Alone | | | | Consolidated | |
|---|---|---|---|---|---|---|---|
| | | Quarter ended March 31, 2018 | Year ended March 31, 2018 | Quarter ended March 31, 2017 | Year ended March 31, 2017 | Year ended March 31, 2018 | Year ended March 31, 2017 |
| | | Audited | Audited | Audited | Audited | Audited | Audited |
| 1. | Total income from operations | 30,599.19 | 109,419.03 | 30,893.88 | 109,038.91 | 235,057.82 | 229,444.33 |
| 2. | Net Profit for the period before Tax | 5,943.12 | 20,715.32 | 4,960.35 | 20,094.46 | 21,657.25 | 22,412.36 |
| 3. | Net Profit for the period after tax | 3,855.65 | 13,435.87 | 3,182.07 | 13,065.20 | 13,277.04 | 14,555.25 |
| 4. | Total Comprehensive Income for the period after tax | 3,845.67 | 13,364.30 | 3,215.05 | 13,062.27 | 19,399.95 | 11,207.87 |
| 5. | Equity Share Capital | 13,275.95 | 13,275.95 | 8,823.45 | 8,823.45 | 13,275.95 | 8,823.45 |
| 6. | Reserves (excluding Revaluation Reserve as shown in the Balance Sheet) | - | 63,168.61 | - | 58,618.97 | 57,869.04 | 50,915.15 |
| 7. | Earnings Per Share (of 10/- each) (not annualized) | | | | | | |
| | (a) Basic (in Rs) | 2.91 | 10.14 | 2.44 | 9.88 | 9.99 | 11.23 |
| | (b) Diluted (in Rs) | 2.90 | 10.10 | 2.43 | 9.85 | 9.95 | 11.20 |

**Notes:**

1. The above is an extract of the detailed format of the Quarterly financial results of the Company for the quarter and year ended March 31, 2018 filed with the Stock Exchanges under Regulation 33 of the Securities and Exchange Board of India (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015. The full format of quarterly financial results of the Company are available on BSE Ltd (www.bseindia.com) and National Stock Exchange of India Limited (www.nseindia.com) and on Company's website (www.clubmahindra.com).
2. The Board of Directors have recommended a dividend of Rs 4/- per share, subject to the approval of members at the Annual General Meeting.
3. The above results have been reviewed by the Audit Committee and approved by the Board of Directors of the Company at their meetings held on May 8, 2018.
4. During the current quarter, Are Villa 3 AB and Are Villa 4 AB have become subsidiaries of Holiday Club Resorts Oy, Finland and in turn of the Company. Further Are Villa 4 AB ceased to be subsidiary of Holiday Club Resorts Oy, Finland and in turn of the Company.
5. Operating segments are reported in a manner consistent with the internal reporting provided to the Chief Operating Decision Maker ("CODM") of the Group. The Group has identified the following segments as reporting segments based on the information reviewed by CODM: MHRIL(Club Mahindra) and Holiday Club Resorts OY (HCRO).
6. The Company has issued and allotted 55,000 equity shares of Rs.10/- each on May 19, 2017, pursuant to exercise of stock options in accordance with the Company's Stock Option Scheme (ESOS 2014). Further on July 12, 2017, the Company issued and allotted 44,417,928 bonus equity shares of Rs.10/- each, in the proportion of 1 (one) bonus share for every 2 (two) fully paid up equity shares to all the registered shareholders as on the Record Date (i.e. July 11, 2017) by capitalization of Securities premium account and consequently, the equity share paid up capital of the Company increased from Rs.888,358,560/- to Rs.1,332,537,840/-. The earnings per share (EPS) data for all the periods disclosed above have been calculated after taking into account the issue of Bonus shares as per Ind AS - 33 on Earnings Per Share.
7. During the year the Company has invested additional amount of Rs 1,532.14 lacs through equity in Gables Promoters Private Limited, a wholly owned subsidiary of the Company.
8. The financial results of the Company for the quarter and year ended March 31, 2017 were audited by another auditor who have expressed unmodified opinion on those results.
9. The figures for the quarters ended March 31, 2018 and March 31, 2017 are the balancing figures between the audited figures in respect of the full financial year and the published year-to-date figures upto the third quarter of the relevant financial year.
10. The figures for the previous year have been regrouped/ reclassified to correspond with current year's classification/ disclosure that include changes consequent to the issuance of "Guidance Note on Division II – Ind AS Schedule III to the Companies Act, 2013".

For **MAHINDRA HOLIDAYS & RESORTS INDIA LIMITED**

Mumbai, 8th May, 2018

**Kavinder Singh**
**Managing Director & CEO**

Adfactors 26